புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

==========================================================================

# திருக்குறள் நோக்குகளும் ஆய்வுகளும்

==========================================================================

**ஆய்வாளர் :**
**ப,விஜயராமன்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி,*
*திருவாரூர் – 610 003.*
==========================================================================

**முன்னுரை :**

எழுதப்பட்ட ஒரு நூல் குறித்த மதிப்பீடுகளும் திறனாய்வுப் பொருண்மைகளும் ‘திருவள்ளுவ மாலை’ என்ற நூல் வடிவம் பெற்ற சிறப்பை முதன் முதலில் தமிழில் பெற்ற நூல் திருக்குறளாகும். திருக்குறளைச் சமய சார்பான நூலாகக் காட்டும் முயற்சிகள், திருவள்ளுவரை குறிப்பிட்ட மதச் சட்டகத்திற்குள் அடைக்க மேற்கொள்ளும் முயற்சிகள், திருக்குறளை ஆன்மீகப் பின்புலத்திற்குள் கொண்டு வரும் முயற்சிகள், திருக்குறளின் சமய நிலையைக் குறித்த கருத்துகளைத் தவிர்க்க பகுத்தறிவு நோக்கில் கொண்டு வரும் முயற்சிகள் என்று திருக்குறள் பற்றியும் திருவள்ளுவர் பற்றியும் மேற்கொள்ளப்படும் அறிவுசார், அரசியல் சார், உணர்வு சார் மற்றும் திரிபு சார் முயற்சிகள் காலந்தோறும் வரலாற்று நெடுகில் நடைபெற்று வருகின்றன. உலகின் வேறெந்த நூலுக்கும் இப்படிப்பட்ட உரிமைகள் கோரப்படுவதும், கோரப்பட்ட உரிமைப்படியே மாற்றப்பட வேண்டும் என்ற வாதங்களை முன்வைப்பதும் அதிகம் இல்லை. இதனால் திருக்குறள் ஆய்வுகள் குறித்தும், குறள் சார்ந்த நூல்கள் குறித்தும், தமிழ் இலக்கியத்தில் குறளின் தாக்கம் குறித்தும், இவற்றின் அடிப்படையில் உண்டாகும் குறள் நோக்குகள் குறித்தும் ஆராய வேண்டிய அவசியம் உண்டாகிறது. அவ்வசியம் கருதிக் காலந்தோறும் உண்டான குறள் குறித்த நோக்குகள் குறித்தும் மேற்கொள்ளப்பட்ட குறளாய்வுகள் குறித்தும் இக்கட்டுரை ஆய்ந்து அதன் அடிப்படையில் குறள் குறித்த ஆய்வுகளும் நோக்குகளும் எவ்விதம் அமைய வேண்டும் என்று ஆராய முற்படுகிறது.

**ஆய்வு நெறிமுறைகள் :**

ஒப்பாய்வு முறைத் திறனாய்வு, தருக்க முறைத் திறனாய்வு, தொகுப்பு முறைத் திறனாய்வு, பகுப்பு முறைத் திறனாய்வு, மதிப்பீட்டு முறைத் திறனாய்வு, வரலாற்று முறைத் திறனாய்வு மற்றும் விளக்க முறைத் திறனாய்வுக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

***தமிழ் மரபும் திருக்குறளும்.***

தமிழ் மரபில் அகம், புறம் என வாழ்க்கை இரண்டாகப் பகுக்கப்படுகிறது. அகமும் புறமும் திணைக் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கியங்களில் பேசவும் விளக்கவும் படுகிறது. அகத்திணை, புறத்திணைக் கோட்பாடுகளை மீறாமல் செல்வதை இலக்கண இலக்கியங்கள் மரபாகக் கொள்கின்றன. வாழ்வின் தலையாய இலக்குகளை இலக்கியங்களுக்கான இலக்கணங்கள் உறுதிப்பொருள்கள் என மொழிகின்றன. அவ்வுறுதிப்பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கையும் தமிழ் இலக்கிய மரபு கொள்கிறது. உறுதிப்பொருள்களில் ஒன்றையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டதையோ அல்லது அனைத்தையுமோ மையமாகக் கொண்டு அக மற்றும் புற வாழ்வை தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன. இம்மையங்கள் காலப்போக்கில் வாழ்வியல் விழுமமாகவும் பண்பாடாகவும் வளர்ச்சி பெறுகின்றன.

தமிழ் இலக்கியத்தின் மையப்பொருளாகவும் அக மற்றும் புற வாழ்வின் உறுதிப் பொருளாகவும் அமையும் நான்கினுள் ஒன்றான அறம் தமிழர் வாழ்விலும் தமிழ் இலக்கியங்களிலும் சங்க இலக்கியம் தொட்டு வளர்ச்சி பெறுகிறது. சங்க மருவிய காலத்துப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் எனத் தனித்த வளர்ச்சியையும் காண்கிறது. பிற்காலத்திலும் அற நூல்கள் தொடர்ந்து வளர்ச்சி பெறுகின்றன. தமிழ் அறவியல் வளர்ச்சியிலும் அறநூல்களின் வளர்ச்சியிலும் திருக்குறள் முதன்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் நூலாக உள்ளது. அறவியலே அதன் அச்சாணியாகக் கொண்டு வாழ்வியலை விளக்குகிறது. திருக்குறளுக்குப் பின் எழுந்த அறநூல்கள் பலவற்றுக்கும் திருக்குறள் அடிப்படை அறநூலாக அமைகிறது.

***திருக்குறளின் அறவியல் தாக்கம்***

தமிழின் அறவியல் நூல்கள் பலவற்றுக்கும் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் மேற்கோளாகவும் அமையும் சிறப்பு திருக்குறளுக்கே உரியது. நாலடியார் திருக்குறளின் நேரடி பாதிப்பு கொண்ட நூலாகத் தமிழ் அறிவுலகில் கொள்ளப்படுகிறது. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்று நாலடியாரும் திருக்குறளும் ஒன்றாக வைத்து எண்ணப்பட்ட போதிலும் திருக்குறளின் விரிவான ஆழமான பார்வை நாலடியாரினின்று பல வகைகளில் மாறுபட்டது என்பது ஆய்வுலகம் ஏற்கும் முடிவாகும்.

தமிழ் மரபு கோட்பாட்டுப் பின்னணியை விளக்க திணைக் கோட்பாடுகள் நல்லதொரு சான்றாகும். தமிழின் அறமரபுக்கும் கோட்பாட்டுப் பின்னணியை விளக்க வள்ளுவத்தின் அறவியல் கோட்பாடுகள் நல்லதொரு சான்றாகும். திருக்குறள் அறத்துப்பாலில் தொடங்குகிறது. பொருட்பாலிலும் இன்பத்துப் பாலிலும் அறத்தின் கூறுகளைக் கொண்டு விளங்குகிறது. சங்க இலக்கிய அறவியல் கூறுகளைக் கொண்டதாகவும் புலால் மறுத்தல், பரத்தமை, சூது, கள்ளுண்ணுதல் போன்ற இடங்களில் அவற்றை மறுத்தும் அறக்கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்கிறது. இதனின்று குறளாசிரியரரான திருவள்ளுவர் அறக் கோட்பாடுகளில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்றவர் என்பதை அறிய முடிகிறது.

திருக்குறளுக்குப் பிற்காலத்து எழுந்த நூல்கள் பலவற்றுக்கும் திருக்குறள் அறச்சான்றாக அமைகிறது. திருக்குறளின் தாக்கத்தில் எழுந்துள்ள பவ அறநூல்கள்

திருவள்ளுவரின் அறவியல் கோட்பாடுகளின் தாக்கத்தைக் காட்டக் கூடியது. கோட்பாடு கருத்தியல் ரீதியிலானது எனினும் அது வாழ்விலிருந்து பொதுமைப்படுத்தப்பட்டுப் பெறப்படுகிறது. நடைமுறை செயல்முறை ரீதியிலானது எனினும் அது கோட்பாட்டின் தாக்கத்தை இலக்கியங்கள் வாயிலாகக் காலந்தோறும் பெற்றுக் கொள்கிறது. மேற்படி கூற்றுகளை மெய்ப்பிக்கும் விதத்தில் 'விருந்தோம்பல்' எனும் தமிழர் வாழ்வின் பொதுமையினின்று திருக்குறளின் 'விருந்தோம்பல்' எனும் அறவியல் கோட்பாடு உருவாவதையும், பரத்தமையை விலக்கிய 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் குறள் உருவாக்கிய அறவியல் கோட்பாட்டினின்று தமிழரின் வாழ்வியல் அமைவதையும் சுட்டிக் காட்ட இயலும். தமிழ் வாழ்வு குறள் காட்டும் அறவியல் கோட்பாடுகளின் படி அமைய வேண்டும் எனும் நோக்கில் பாடநூல்களில் திருக்குறள் கட்டாயம் இடம் பெற வேண்டும் என வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற தீர்ப்பையும் இவ்விடம் ஒப்பு நோக்கலாம். பொது மன்றங்களிலும் பேருந்துகளிலும் எழுதப்பட்டிருக்கும் குறட்பாக்களை நோக்குகையில் கோட்பாடும் வாழ்வியலும் இலக்கியங்களால் இணைவு பெற்று ஒன்றுக்கொன்று வளர்ச்சி பெறுகின்றன என்பதைத் திருக்குறளை மையமாக வைத்து அறிந்து கொள்ள இயலும்.

**திருக்குறளின் கோட்பாட்டுத் தாக்கம்**

திருக்குறள் தமிழ் அற இலக்கியத்தில் மட்டுமல்லாது உலக அற இலக்கியங்களில் தலைசிறந்த நூல் என்பதை எந்நாட்டாரும் ஏற்றுக் கொண்டதைப் பன்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதன் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை காட்டுகிறது. திருக்குறளின் அறவியல் குறித்தும் அதன் கோட்பாடுகள் குறித்தும் பல்வேறு ஆய்வுகள் திருக்குறள் தோன்றிய காலம் தொட்டுத் தமிழில் நடைபெற்று வந்துள்ளன. திருக்குளைப் போற்றி எழுந்துள்ள திருவள்ளுவமாலையில் திருக்குறள் குறித்த ஆய்வுச் சாரத்தைக் காண முடிகிறது. சான்றாகத் திருவள்ளுவரின் திருக்குறளைத் சமயத் தத்துவ கோட்பாடுகளோடு ஒப்பு நோக்கில் முடிவு கூறும் வகையில்

> ***"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்***
> ***அன்றென்ப ஆறு சமயத்தார் – நன்றென***
> ***எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்***
> ***முப்பால் மொழிந்த மொழி."[1]***

எனும் திருவள்ளுவ மாலையின் செய்யுள் அமைகிறது.

ஐவகை வேதங்கள், அறுவகை சமய நூல்கள், உறுதிப்பொருள்கள் நான்கனோடு ஒப்பிட்டு அனைத்தையும் ஒப்ப அடக்கியதாக ஆய்ந்து முடிவு கூறும்

> ***"ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்***
> ***தருமம் முதல்நான்கும் சாலும் – அருமறைகள்***
> ***ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்***
> ***புந்தி மொழிந்த பொருள்."[2]***

எனும்படியான செய்யுளும் திருவள்ளுவ மாலையில் இடம் பெற்றுள்ளது. இதனின்று சற்று மாறுபட்டு ஐவகை வேதங்கள் வடமொழிக்குரியதென்றும் திருக்குறள் தமிழுக்குரியதென்றும் ஒவ்வொன்றையும் ஒப்பிட்டு எது சிறந்ததென்று உரைத்தல் இயலாது என முடிவு கூறும்

> ***"………………………………………….. – ஆரியம்***
> ***வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்***

**ஓது குறட்பா உடைத்து."**[3]

*செய்யுளும் திருவள்ளுவ மாலையில் உள்ளது. அதனின்று மேலும் மாறுபட்டு வேதத்தினும் சிறந்தது திருக்குறள் என உரைத்து*

**"ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றி உரைத்து ஏட்டின் புறத்தெழுதார் – ஏட்டெழுதி**
**வல்லுநரும் வல்லாளரும் வள்ளுவனார் முப்பாலைச்**
**சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று."**[4]

*முடிவு பகரும் செய்யுளும் திருவள்ளுவமாலையில் இடம் பெற்றுள்ளது. திருக்குறளைத் தமிழ் வேதமாகக் கொள்ளும் முடிவை*

**"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்**
**ஓதத் தமிழால் உதைசெய்தார் ………."**[5]

*என்ற செய்யுளால் அறிய முடிகிறது. திருவள்ளுவமாலையில் பலதரப்பட்ட புலமை மிக்கப் புலவோர்கள் அறநோக்கு, சமயநோக்கு, வேதநோக்கு எனப் பலவாறாகக் கோட்பாட்டு நோக்கில் ஆய்ந்து தம் முடிவுகளைப் புலப்படுத்தியுள்ளமை மேற்படி சான்றுகளால் நன்கு புலனாகும்.*

**திருக்குறள் ஆய்வுப் பதிப்புகள் :**

*திருக்குறள் உரையாசிரியர்கள் எனப் போற்றப்படும் பதின்மரும் ஆய்வுப் பொருள் விளங்க உரை தீட்டியுள்ளனர். அவர்கள் ஆய்வாளர்களாகக் கொள்ளத்தக்க வகையில் தம் பணியை ஆற்றியுள்ளனர். பதின்மர் உரையில் சிறந்ததாகக் கொள்ளப்படும் பரிமேலழகரின் உரையை ஆய்ந்து மிக விரிந்த முறையில் தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரைகளோடு 1904 இல் கோ. வடிவேலு செட்டியார் தத்துவக் கோட்பாடுகளை உரிய இடங்களில் சான்று காட்டி 'திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்' என்ற தலைப்பில் இரு தொகுப்புகளாக்கி நூலாக வெளியிட்டுள்ளார். அந்நூலில் திருக்குறளைத் தமிழ்வேதம் என வடிவேலு செட்டியார் குறிப்பிடுகிறார்.*

*பரிமேலழகர் உரைக்கு மாற்றாக 1949 இல் புலவர் குழந்தை திருக்குறள் உரை செய்ததோடு 'திருக்குறளும் பரிமேலழகரும்' என்ற நூலை 1952 இல் வெளியிட்டார். பரிமேலழகர் உரை மரபோடு புலவர் குழந்தை வேறுபடுவதற்குக் காரணமாக அமைவது கோட்பாட்டு வேறுபாடு என்பதை அவரது கடவுள் மறுப்புக் கோட்பாடும், தமிழ் மரபுக் கோட்பாடும் காட்டுகிறது. இவ்வகை முயற்சியின் தொடர்ச்சியாகத் தமிழ் மரபை முன்னிலைப்படுத்தி 1969 இல் வெளியான ஞா. தேவநேயப் பாவாணரின் திருக்குறள் மரபுரையைக் கொள்ளலாம். பாரதிதாசனும் இவ்வகையில் முயன்று முதல் ஒன்பது அதிகாரங்கள் வரை உருவாக்கிய திருக்குறள் ஆய்வுரை முயற்சி 'பாரதிதாசன் திருக்குறள் உரை (ஆய்வும் பதிப்பும்)' என்ற நூலாக வடிவம் பெற்றுள்ளது.*

*1949 இல் வெளியான மு. வரதராசனின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்ற நூல் உரையும் ஆராய்ச்சியும் கொண்ட நூலாகத் திரு. வி.க. கலியாணசுந்தரம் போன்ற குறளுக்கு உரை கண்டோரால் பார்க்கப்பட்டது.*

*பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகியோர் உரையோடு இன்னபிற கிடைத்தற்கரிய உரைகளோடும் மேற்கோள்களோடும் ஒப்புமைகளோடும் தருமபுர ஆதீனத் துணையோடு 1950 இல் ச. தண்டபாணி தேசிகர் 'திருக்குறள் – உரைவளம்' எனும் நூலை மிகு*

உழைப்பைத் தந்து ஆய்வுச் செறிவோடும் நுட்பத்தோடும் வெளியிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து பனிரெண்டு கால உழைப்பை நல்கிப் பரிமேலழகரின் உரையை முதன்மையாகக் கொண்டு அதே போழ்தில் உரைவேறுபாடு உடைய இடங்களையும் கருத்தில் கொண்டு 'திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பை' 1963 இல் இராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வெளியீடாக கி.வா.ஜகந்நாதன் அவர்கள் கொணர்ந்தார். இந்நூலில் அவர்தம் ஆய்வுரையோடு அவர் காலத்து ஆய்வறிஞர்கள் பலரின் திருக்குறள் ஆய்வுரைகளையும் அந்நூலில் இணைத்துள்ளார். அவ்வாய்வுரைகளில் அறவியலோடு ஒப்ப நோக்கும் வகையிலும் திருக்குறளைக் கோட்பாட்டு நோக்கில் ஒப்ப நோக்கும் வகையிலும் திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம்[6], வள்ளுவரின் உளநூல் தத்துவம்[7], திருக்குறளின் தத்துவம்[8], திருவள்ளுவர் நீதி[9] போன்ற ஆய்வுக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

**திருக்குறள் குறித்த பல்கலைக்கழக ஆய்வுகள்**

திருக்குறளை மையமாகக் கொண்ட பல்கலைக்கழக ஆய்வுகள் 1967 இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டிற்குப் பிறகு விரிவடைந்தன. அண்ணாமலை பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வு மையம் மூலமாக ச. தண்டபாணி தேசிகரின் காப்பியங்களில் திருக்குறள், மு. கோவிந்தசாமியின் திருக்குறள் பொருளகராதி, திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் முதலிய திருக்குறளோடு தொடர்புடைய ஆய்வுப் பொருண்மையுள்ள நூல்கள் வெளியாகின.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திருக்குறளுக்கு உரைவளம் கண்ட தண்டபாணி தேசிகரைக் கொண்டு திருக்குறள் உரைக்களஞ்சியத்தை இயல் வாரியாக வெளியிட்டது. உரைக்களஞ்சியமாயினும் அது ஆய்வுப்பெற்றியுடையதாக[10] வ.சுப.மாணிக்கம் சுட்டுகிறார். ஆராய்ச்சிக்குரிய அடைவு நூலாகவும், ஆய்வு முடிநிலைகளை உடையதாகவும் அவ்வுரைக் களஞ்சியம் அமைந்ததை அந்நூலுக்கு முன்னுரை வழங்கிய அறிஞர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழகம் திருக்குறள் ஆய்வு தொடர்பாக 1983 இல் நடத்திய கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து 1987 இல் திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டது. இந்நூலில் திருக்குறளைத் திறனாய்வு செய்யும் நோக்கிலான ஆய்வுக்கட்டுரைகளும், ஆய்வு மதிப்பீடு செய்யும் கட்டுரைகளும் அடங்கியுள்ளன. இந்நூலில் திருக்குறளின் அறவியல் ஆய்வுகள் தொடர்பாக அதிகம் ஆய்ந்தவராகக் கருதப்படும் க.த. திருநாவுக்கரசு திருக்குறளில் நடைபெற்றுள்ள அறவியல் ஆய்வுகள் தொடர்பாகவும் திருக்குறளின் அறவியல் ஆய்வுகள் எவ்வண்ணம் அமைய வேண்டும் என்பது தொடர்பாகத் 'திருக்குறளில் அறவியல் சார்ந்த ஆய்வுகள்'[11] என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார். அக்கட்டுரையில் வ.சுப. மாணிக்கம் அவர்களின் 'வள்ளுவம்' என்ற நூலைச் செயன்முறை சார்ந்த அறவியல் நூலாக வகைபடுத்தியுள்ளார். ஏனைய பிற ஆய்வு நூல்களைக் குறைவான அறவியல் பண்புகளைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்தவைகளாகக் குறிப்பிடுகிறார். திருக்குறளில் அறவியல் ஆராய்ச்சி, திருக்குறளில் அறவியல் ஒப்பாய்வு ஆகிய இரு தளங்களில் திருக்குறள் தொடர்பான அறவியல் ஆய்வுகள் தொடர வேண்டியதன் அவசியத்தையும் க.த. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார்.

**தனித்த ஆய்வுகள்**

தமிழ் நூல்களின் அற இலக்கிய ஆய்வுகள் அனைத்திலும் திருக்குறள் முக்கிய இடம் பிடித்திருப்பதைப் பல்வேறு பல்கலைக்கழக ஆய்வேடுகளிலும் ஆய்வு முயற்சிகளிலும் காண முடிகிறது. சான்றாக க.ப. அறவாணனின் முயற்சியின் விளைவாக உருவான அற இலக்கியக் களஞ்சியத்தில் திருக்குறள் குறித்த ஆய்வியல் கருத்துகள் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது. அந்நூல் சமூகவியல் நோக்கில் அறவியல் ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறது.

பல்கலைக்கழக ஆய்வுகளோடு தொடர்பில்லாவிட்டாலும் மறைமலையடிகள், ரா.பி. சேதுப்பிள்ளை, கி.ஆ.பெ. விசுநாதம் போன்றோரின் திருக்குறள் தொடர்பான நூல்கள் திருவள்ளுவரின் அறவியல் குறித்த அணுகுமுறைகள் குறித்து ஆய்வுப் பொருண்மை விளங்கவும் அறவியலைச் செயன்முறையில் கொள்வதற்கேற்ற பாங்கோடும் விளக்குகின்றன.

***மாறுபட்ட நவீன ஆய்வுகள்***

பெரும்பாலான திருக்குறள் ஆய்வுகள் திருவள்ளுவரின் அறவியலை விதந்தோதியா அல்லது ஒப்பாய்வோ செய்துள்ளதற்கு மாறாகத் 'தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்' என்ற ராஜ் கௌதமனின் நூல் பல தமிழ் அறவியல் நூல்களின் அறவியலை மறுபொருள் கோடல் செய்திருக்கிறது. அந்நூலில் திருக்குறள் பற்றிய மறுபொருள் கோடல்களும் அடங்கியுள்ளன. தமிழ் அறமானது ஆள்வோரின் அறமாக இருந்துள்ளதையும் ஆளப்பட்டோரின் அறமாக அமைந்திராத தன்மையையும் அந்நூலில் ராஜ் கௌதமன் ஆதாரப்பூர்வமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

திருக்குறள் ஆய்வு தொடர்பாக ஜெயமோகன் எழுதியுள்ள 'இந்திய சிந்தனை மரபில் குறள்' என்ற கட்டுரை தத்துவ நோக்கில் திருவள்ளுவர் எவ்வாறு கவித்துவமான அறவியல் முடிவுகளை அடைகிறார் என்பதைக் காட்டுகிறது. ஆய்வுகளின் விரிவாலும் புதுமையான நோக்குகளாலும் திருக்குறள் குறித்த புரிதல்களும் தெளிவுகளும் ஆழமாகின்றன. இவ்வாய்வுகள் அனைத்தும் தமிழுக்கென்று தனித்த அறவியலை உருவாக்கியதில் திருக்குறள் தனித்த இடம் பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தினின்று தொடங்கிய தமிழ் அறவியலைத் திருக்குறள் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சென்றதை நிலைநாட்டுகின்றன.

***முடிவுரை :***

திருக்குறள் குறித்து நாம் அக்கறையோடு நோக்க வேண்டியதன் பின்புலத்தில் தற்காலத் திருக்குறள் நோக்குகளால் அது ஏற்படுத்தப் போகும் கலாச்சாரம் மற்றும் பண்பாடு சார்ந்த நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கத்தையும் நோக்க வேண்டியிருக்கிறது. தமிழர்களின் அறிவுசார் சொத்து என்று கூட உரிமை கொண்டாட முடியாத அளவுக்கு உலகோர் அனைவருக்குமான அறிவுசார் பொதுச்சொத்தாக விளங்கும் திருக்குறள் சமயம் சார்ந்தோ, குறுகிய அரசியல் சார்ந்தோ, சுருங்கி விடாமல் காக்க வேண்டிய கடமையை அனைவர் முன்னும்

> ***"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்***
> ***கண்டானாம் தான்கண்ட வாறு."*** *(குறள். 849)*

என்று திருக்குறளே முன் வைக்கிறது. திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் குறித்த கருத்துகளைப் புலப்படுத்தும் போது ஆழ்ந்த பொருண்மையோடும் ஆய்வுத் தரவுகளின் கோட்பாடுகளுக்கு முரண்பாடு ஏற்படாதவாறும் முன் வைப்பது அவசியமாகிறது.

ஆய்வுகளின் விரிவாலும் சரியான நோக்குகளாலும் திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் உரையில் மேட்டிமையான வருணாசிரமப் பார்வை இருப்பதும் பின்னர் எழுந்த தமிழ் மரபிலான ஆய்வு உரைகளும் பகுத்தறிவுக் கோட்பாட்டிலான உரைகளும் அதை மாற்றி அமைத்தன என்பது புலனாகும். இதனின்று சரியான நோக்குகளாலும் தொடர் ஆய்வுகளாலும் திருக்குறளினின்று புலப்படப் போகும் அறவியல் உண்மைகளும் ஆய்வுப் பொருண்மைகளும் இன்னும் அதிகம் இருக்கின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலமாக அறிந்து கொள்ள இயலும்.

**சான்றெண் விளக்கம்**

[1] கல்லாடர், திருவள்ளுவ மாலை, *9*
[2] களத்தூர் கிழார், திருவள்ளுவ மாலை, *44*
[3] வண்ணக்கஞ் சாத்தனார், திருவள்ளுவ மாலை, *43 : 2, 4*
[4] கோதமனார், திருவள்ளுவ மாலை, *15*
[5] செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார், திருவள்ளுவ மாலை, *42 : 1, 2*
[6] தி.சு. அவிநாசிலிங்கம், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, பக். *105, 111*
[7] க.ச. அருள்நிதி, திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, பக். *112, 116*
[8] டி.எம்.பி. மகாதேவன், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, பக். *117, 121*
[9] டி.எஸ். கந்தசாமி முதலியார், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, பக். *122, 135*
[10] ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், ப. *2*
[11] கு. மோகனராசு (பதிப்பாசிரியர்), திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும், பக். *33, 58*

**பயன்பட்ட நூல்கள் :**


அறவாணன், க.ப. *அற இலக்கியக் களஞ்சியம்.* சென்னை: தமிழ்க்கோட்டம், 2008.

புலவர் குழந்தை, (உரையாசிரியர்). *திருக்குறள் புலவர் குழந்தையுரை.* சென்னை: சாரதா பதிப்பகம், 2005.

சேதுப்பிள்ளை, ரா பி. *வழி வழி வள்ளுவர்.* சென்னை: சீதை பதிப்பகம், 2014.

தண்டபாணி, தேசிகர் ச. *திருக்குறள் உரைக்களஞ்சியம் (பாயிரவியல்).* மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1981.

—. *திருக்குறள் உரைவளம் (3 தொகுதிகள்).* தருமபுரம்: ஞானசம்பந்தம் பதிப்பகம், 2014.

தேவநேயப், பாவாணர் ஞா (உரையாசிரியர்). *திருக்குறள் தமிழ் மரபுரை.* சென்னை: தமிழ் மண் பதிப்பகம், 2000.

மாணிக்கம், வ சுப. *வள்ளுவம்.* சென்னை: இராமையா பதிப்பகம், 2017.

மோகனராசு, கு (பதிப்பாசிரியர்). *திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும்.* சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1987.

ராஜ், கௌதமன். *தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2018.

வடிவேலு, செட்டியார் கோ. *திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (2 தொகுதிகள்).* சென்னை: சிவாலயம், 2015.

மு. வரதராசன், *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.* சென்னை: பாரி நிலையம், 2002.

ஜகந்நாதன், கி வா (பதிப்பாசிரியர்). *திருக்குறள் ஆராய்ச்சி பதிப்பு.* கோயம்புத்தூர்: ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், 2004.

ஜெயமோகன். *இந்திய ஞானம் தேடல்கள் புரிதல்கள்.* சென்னை: கிழக்குப் பதிப்பகம், 2016.